**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.03.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உலக தண்ணீர் தின விழா**

உலக தண்ணீர் தினம் 22.03.2023 இன்று கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள நீர் நுட்ப மையத்தால் ஏற்பாடு செய்து கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் M. இரவீந்திரன் தலைமை தாங்கி உரையாற்றினார். உலக அளவில் 22 மில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீரை பேணுவதில் சிரமம் மேற்கொள்கின்றனர். மேலும் 2.6 மில்லியன் மக்கள் தண்ணீரை சேகரிக்க குறைந்தபட்சம் 30 நிமிடங்களுக்கு மேல் செலவிடுகின்றனர். சர்வதேச விதிமுறைகளின் படி ஆண்டுக்கு 1700 மீ$^3$ க்கும் குறைவாக உள்ள தனிநபர் நீர் கிடைக்கும் நாடுகள் தண்ணீர் பற்றாக்குறை நாடாக வகைபடுத்தப்பட்டுள்ளன. அதில் இந்தியாவின் தனிநபர் நீர் கிடைக்கும் அளவு 1545 மீ$^3$ என்பது இந்தியாவை ஒரு நீர் வறட்சி நாடாகவே எடுத்துக்காட்டுகிறது. இந்தியா ஒரு விவசாய நாடாக இருப்பதால் நீர்ப்பாசனம் என்பது மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் மொத்த நீர்தேவைகளில் 78 சதவீதம் நீர்ப்பாசனத்திற்காகவும் 6 சதவீதம் உள்நாட்டு உபயோகத்திற்காகவும் 5 சதவீதம் தொழில் துறைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இத்தருணத்தில் காலநிலை மாற்றம், மாசுபாடு மற்றும் பற்றாக்குறையின் காரணமாக நீரின் தேவை அதிகரித்து வருவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுவே தண்ணீரை பாதுகாக்கவும், மதிப்பிடவும் உரிய நேரம். ஒரு ஜீன்ஸ் காலனியை உற்பத்தி செய்ய 10,000 லிட்டர் தண்ணீர் செலவு செய்யப்படுகிறது. இது ஒரு நபர் பத்து ஆண்டுகளுக்கு குடிப்பதற்கு தேவைப்படும் நீரின் அளவாகும். ஆகவே ஒவ்வொரு குடிமகனும் நீரை பயன்படுத்துவதும் அதை மாசு படுத்தாமல் உட்கொள்வதும் இன்றியமையாததாகும். தண்ணீர் என்பது ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு செய்திகளை அறிவிக்கிறது. எனவே உலக தண்ணீர் தினத்தன்று தண்ணீர் குறித்த அனைத்து நற்செய்திகளையும் தெரிந்து தண்ணீரைக் கொண்டாடுவோம். இன்று ஒரு சொட்டு நீரை சேமிப்பது நாளை ஒருவரின் தாகத்தை தணிக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

இவ்விழாவில் உலக தண்ணீா் தினத்தின் அறிமுக கருத்துகளுடன் பங்கேற்ற அனைவரையும் நீர் நுட்ப மைய இயக்குநா் முனைவா்.செ.பழனிவேலன் வரவேற்றாா். முனைவா்.சி.சுவாமிநாதன், பேராசிரியா் அவா்கள் நன்றி உரை ஆற்றினாா்.

**மக்கள் தொடா்பு அலுவலா்**